| | | | |
|---|---|---|---|
| Headline | Four heritage sites in Unesco's tentative list | | |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 06 Sep 2018 | Color | Black/white |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 2 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 238 cm² |
| Journalist | NULL | AdValue | RM 923 |
| Frequency | Daily | PR Value | RM 2,769 |



# மலேசியாவில் நான்கு இடங்கள் உலக பாரம்பரிய மையங்களாகும்!



கோலாலம்பூர், செப்.6-

மலேசியாவிலுள்ள 4 பாரம்பரிய இடங்கள் யுனெஸ்கோ எனப்படும் ஐக்கிய நாட்டு கல்வி, அறிவியல் அமைப்பில் சேர்த்துக் கொள்ளப் படுவதற்குத் தயார் நிலையில் உள்ளதாக நேற்று மேலவையில் தெரிவிக்கப்பட்டது.

தேசிய பூங்கா, பேரா மாநிலத்தின் கெரிக்கிலுள்ள ரோயல் பெலும், சிலாங்கூர், கோம்பாக்கிலுள்ள பெர்மாத்தாங் குவார்ஸா, மலேசிய வன ஆய்வுக் கழகம் ஆகியவையே அவை என்று சுற்றுலா, கலை, பண்பாட்டுத்துறை துணை அமைச்சர் முகமட் பக்தியார் வான் சிக் கூறினார்.

சரித்திரமும் பாரம்பரியமும் கொண்ட மேற்கண்ட மையங்களை யுனெஸ்கோ உலக பாரம்பரிய மையங்களாக அங்கீகாரம் வழங்குவதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அவர் சொன்னார்.

நாட்டில் 69 பாரம்பரிய மையங்கள் உள்ளன. சரித்திரம், பாரம்பரியம் கொண்ட இடங் களை சிறப்பு இடங்களாக பிரகடனப்படுத்துவதற்கு தமது அமைச்சு மாநில அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்றி வருவதாகவும் அவர் சொன்னார்.




மேற்கண்ட இடங் களில் மேம்பாட்டுத் திட்டங்கள் ஏதும் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்ப்பதற்கு அவை சிறப்பு இடங்களாகப் பிரகடனப்படுத்தப்படும் என்றும் அவர் சொன்னார். நேற்று மேலவையில் கேள்வி - பதில் நேரத்தின்போது செனட்டர் டத்தோ ஃபாஹாரியா முகமட் நோர்டினின் துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு சொன்னார்.

குறிப்பிட்ட பாரம்பரிய மையங்கள் யுனெஸ்கோ உலக பாரம்பரிய மையங்களாக பிரகடனப்படுத்துவதற்கு முன்பு சில பல்கலைக் கழகங்களின் ஆய்வு உட்பட தேசிய பாரம்பரிய இலாகாவும் அவற்றை முறையாக ஆய்வு செய்து வருவதாகவும் அவர் சொன்னார்.

செனட்டர் டத்தோ ஓங் சோங் சுவேனின் துணைக் கேள்விக்குப் பதிலளித்த அவர், குறிப்பிட்ட ஓர் இடத்தை யுனெஸ்கோ பாரம்பரிய மையமாகக் கொண்டு வருவதற்குக் குறைந்தது 15 லட்ச வெள்ளி செலவிட வேண்டியுள்ளதாகவும் அவர் சொன்னார்.

Powered by: iSENTIA